சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி- நெடுஞ்சாலைத் துறை – கருணையடிப்படையில் பணி நியமனம் – காலஞ்சென்ற சாலைப்பணியாளர் திரு.என்.நாகன் என்பவரின் மகன் திரு.நா.ராஜகுமார், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – விதிகளைத் தளர்த்தி பணிவரன்முறை செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (2ப) எண். 42

நாள்:25.09.2023

சோபகிருது, புரட்டாசி 08,

திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை கடித எண்.9231/நிர்.7/2001, நாள் 31.10.2022 மற்றும் 16.03.2023.

---

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்கள், நெடுஞ்சாலைத் துறையில் திருவாடானை (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்ட அலுவலகத்தில் சாலைப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த போது திரு.என்.நாகன் அவர்கள் 11.01.1999 அன்று பணியிடையே இயற்கை எய்தினார். அதனையடுத்து மறைந்த அரசு ஊழியரின் மகன் திரு.நா.ராஜகுமார் அவர்கள் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக்கோரி அளித்த விண்ணப்பம் உரிய வழிமுறையில் பெறப்பட்டது. அதன்பேரில் தனியரது வயது, கல்வித்தகுதி மற்றும் தேவைப்படும் அனைத்து சான்றுகளும் அசலாக சரிபார்க்கப்பட்டு அவரது பெயர் இளநிலை உதவியாளர் பதவிக்கான காத்திருப்போர் முதுநிலைப் பட்டியலில் வரிசை எண்.625-ல் பதிவு செய்யப்பட்டது. முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் 29.12.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியருக்கு இளநிலை உதவியாளராகப் பணிநியமனம்

Divisional Engineer (C&M)
Highways, Ramanathapuram.

செய்து ஆணை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் 07.01.2021 மு.ப அன்று சென்னை எல்லை சாலைகள் திட்ட அலுவலகத்தில் பணியில் சேர்ந்து தற்போது இராமநாதபுரம் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்று தெரிவித்துள்ளார்.

2. எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.நா.ராஜகுமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 07.01.2021 மு.ப முதல் வரன்முறை செய்து அரசாணை பெற்று தருமாறு முதன்மை இயக்குநர் (நெ) அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மை இயக்குநர் (நெ), நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58-ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.நா.ராஜகுமார் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 07.01.2021 மு.ப முதல் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக, தனியர் பொருட்டு குறும வயது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன் பிரிவு 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றை தளர்த்தி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இந்த அரசாணை, மனித வள மேலாண்மைத் துறையிடம் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25.

Divisional Engineer (C&M)
Highways, Ramanathapuram.

திரு.நா.ராஜகுமார், இளநிலை உதவியாளர் (நெ).

(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை-25. வழியாக.)

மாநில கணக்காயர், சென்னை-600018.

நகல்:-

மாண்புமிகு அமைச்சர் அலுவலகம் (பொதுப்பணிகள்-
கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள்), சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (தொழிலாளர் நலன் மற்றும் திறன்
மேம்பாடு) அவர்களின் அலுவலகம், சென்னை -9.

அரசு கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச்செயலர், நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள்
துறை, சென்னை-9.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

மனிதவள மேலாண்மைத்துறை,சென்னை-9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

(கோ.எண்.3513305/எச்.எம்.1/2022)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Divisional Engineer (C&M)
Highways, Ramanathapuram.

13/10/2023